Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 34/2023**

**Deposition of PW.10 (LW.11)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாராயணன் | ஜாதி | : | |
| த/பெ | : | சின்னச்சாமி | தொழில் | : | சார்பு ஆய்வாளர், ஓய்வு |
| கிராமம் | : | சின்னாளபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் தாலுகா | வயது | : | 64/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.05.2026.

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்த அம்மனு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது தமிழ்நாடு காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று சின்னாளபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 07.06.2022 ஆம் தேதி செம்பட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது, அன்றையதினம் 17.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது ஆத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அழகர்நாயக்கன்பட்டியை சேர்ந்த ஜவஹர் மகள் அருள்மொழி என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று நிலையம் வந்து அந்த புகார் மனுவின் தன்மைக்கு ஏற்றவாறு நிலைய குற்ற எண்.173/2022 சட்டபிரிவுகள் 294(b), 323 இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன். அந்த முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ.2/PW.10)** ஆக குறியீடு செய்யப்படுகிறது

அன்றையதினமே நான் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 18.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுரேஷ்கண்ணன், சரவணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம், பார்வைமகசர் தயார் செய்தேன். அந்த பார்வைமகசரில் மேற்கண்ட சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றேன். பார்வைமகசர் **(அ.சா.ஆ.3/PW.10)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் **(அ.சா.ஆ.4/PW.10)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அன்றையதினமே இவ்வழக்கின் சாட்சிகளான அருள்மொழி, பிரகாஷ், இலக்கியராஜ், துரைப்பாண்டி, வளர்மதி, ஜவஹர், அருள்முருகன், சுரேஷ்கண்ணன்,

சரவணன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின்பு நான் மருத்துவ விடுப்பில் சென்றபடியால் இவ்வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் செந்தில்குமார் அவர்களிடம் ஒப்படைத்தேன். அவர் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகார்தாரர் அருள்மொழி முதல் கணவரை விவகாரத்து செய்ததற்காக எந்த ஆவணத்தையும் உங்களிடம் விசாரணையில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரிகள் பெயரை குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் தந்தை பெயர் மற்றும் எதிரியின் தந்தையை பெயரை கூப்பிடும் பெயர் உள்ளது. புகார்மனுவில் எதிரியின் பெயர் எந்த இடத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்மனுவில் எந்த தேதியில் புகார் மனு கொடுக்கப்பட்டது என்று புகார்தாரரால் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

புகார்தாரர் அழகர்நாயக்கன்பட்டியில் இருந்து எதன் மூலம் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்மனுவிலும், முதல் தகவல் அறிக்கையிலும் அழகர்நாயக்கன்பட்டியைச் சேர்ந்த செட்டியார் என்று அழைக்கப்படும் பெயர் என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3வது எதிரி ராமன் மகன் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1வது எதிரி ஆனந்த் மகன் என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனந்தின் எந்த மகன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் மிகைப்படுத்தி கொடுத்த புகார்மனுவை சரியாக புலன் விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor